Date: 04.12.2020 C.C.No.05/2017

அ.சா.1 ராஜலெட்சுமி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் சேக்கிபட்டியில் குடியிருக்கிறேன். நான் எந்த வழக்கிற்காக தற்போது சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்று தெரியமா என்றால் என் கணவர், மாமியார், மானமார், கொளுந்தனார் என்னை கொடுமைப்படுத்திய வழக்கில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். புகார் நான்தான் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் ஆமாமம். எனக்கும் 1வது எதிரி திருமாள்மணிக்கும் என்றைக்கு திருமணம் நடந்தது என்றால் 04.04.2012. நான் முதல் விசாரணையில் சொல்லியள்ள 11 பவுன் நகை என்னிடம்தான் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய 17 பவுன் நகை என் கணவரிடம் உள்ளது. நான் முதல் விசாரமணயில் சொல்லியள்ள நகை 11 பவுனும், கணவருக்கு 3 பவுனும் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரிதான். 6 மாதங்கள் மட்டும் என் கணவருடன் சந்தோசமாக வாழ்ந்தேன். அதன்பின்னர் நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் அவர்கள்தான் என்னை அடித்து கொடுமைப்படுத்தி, சேலைகளை கிழித்து என் பெற்றோர் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டுச்சென்றனர். நான் என்னுடைய முதல் விசாரணையில் என் வலைகாப்பிற்காக என் பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரிதான். (சாட்சி மீண்டும் முதலில் அடித்து அப்பாவீட்டில் கொண்டுபோய் விட்டார்கள் என்றும் பின்னர் மீண்டும் வலைகாப்பிற்காக கணவர் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றும் கூறுகிறார்.) வலைகாப்பிற்கு பின்பு எனக்கு எப்போது குழந்தை பிறந்தது என்றால் 2013ல் வைகாசியில் வலைகாப்பும், குழந்தை 2013 ஆவணியில் பிறந்தது. நான் சொல்வதுபோல் எனக்கு எந்த கொடுமையம் நடைபெறவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. எனக்கு கொடுமையம் சித்திரவதையம் நடந்தது. என்னை ஒழுங்காக சாப்பிட விடாமலும், குளிக்க விடாமலும், சேலை அணியவிடாமலும் கொடுமை நடந்தது. நான் 4 பேர்மீது புகார் கொடுத்துவிட்டு பின்னர் போலீசார் விசாரணையில் சபரி எதுவும் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது அணைவர்மீதும் மீண்டும் புகார் சொல்கிறேன் என்றால் சபரி என்னை விவாகரத்து செய்யவேண்டும் என்று சொல்லி கொடுமைப்படுத்தி என்னையம் என் குழந்தையையம் எத்தி விட்டார். நான் சபரிமீது தற்போது பொய்யாக புகார் கொடுக்கிறேன் என்றால் இல்லை. சரியாகத்தான் சொல்கிறேன். நான் சொல்வதுபோல் யாரும் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்றால் நானாகத்தான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு நான் பிரிந்த பின்பு நான் என் கணவருடன் சேர்ந்துவாழ எந்த முயற்சியம் எடுக்கவில்லை என்றால் முயற்சி எடுத்தேன், அவர்தான் என்னை பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டார்.

04.12.2020 C.C.No.05/2017

அ.சா.2 ராமமூர்த்தி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

அ.சா.1க்கும் எதிரிக்கும் திருமணம் எப்போது நடந்தது என்றால் 2012ம் வருடம் தேதி ஞாபகமில்லை. பங்குனி மாதத்தில் நடைபெற்றது. என் மகளுக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் 13 பவுன் போட்டோம். மாப்பிள்ளைக்கு எவ்வளவு செய்தோம் என்றால் ஒன்றரை பவுன் கை செயினும், 2 பவுன் கழுத்து செயினும் செய்தோம். மொத்தம் பதினாரை பவுன் செய்தீர்களா என்றால் என்றால் 15 பவுன் செய்தோம். முதல் விசாரணையிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் ஆமாம். முதல் விசாரணையிலுள்ள விபரங்கள் நான்தான் சொன்னேனா என்றால் நான்தான் சொன்னேன். முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் நகைகள் பற்றி சொல்லியள்ளது வேறுபட்டுள்ளது என்றால் நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் சொல்கிறேன். முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி என் மகளை எதிரிகள் கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. கொடுமைப்படுத்தப்போயிதன் இந்த அளவுக்கு வந்தது. 2012-ம் ஆண்டிலிருந்து என் மகளை 1-வது எதிரியுடன் சேர்ந்து வாழ்வதற்கு ஏதாவது முயற்சி எடுத்தேனா என்றால் எடுத்தேன். பல கூட்டங்கள் கூட்டினேன். என் மகளுக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

04.12.2020 C.C.No.05/2017

அ.சா.3 மலேஸ்வரி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் எதற்காக நீதிமன்றம் வந்துள்ளேன் என்றால் என் மகளுக்காக வந்துள்ளேன். என் மகளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2012 வருடம் பங்குனி மாதம். அ.சா.2 எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கணவர். என் மகளுக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் என் மகளுக்கு 11 பவுனும் என் மாப்பிளைக்கு 3 பவுனும் போட்டோம். என் மகளை அடித்து சித்ரவதைப்படுத்தியது பொய் என்றால் இல்லை. அவர்கள் அடித்து மிகவும் சித்ரவதை படுத்தினார்கள். என் மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகளும் 1-வது எதிரியும் எவ்வளவு நாட்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள் என்றால் 6,7 மாதங்கள் இருக்கும் அதிலும் என் மகள் நிறைய சித்ரவதை செய்யப்பட்டாள் . அதை எங்களிடம் அப்பொழுது சொல்லவில்லை. 1-வது எதிரி மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் இந்த ஒரு வழக்கு தான் போட்டோம். DVC.07/2016 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

04.12.2020 C.C.No.05/2017

அ.சா.4 ஜெயராமன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான் எதற்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் போலீசார் சொல்லி சாட்சியமளிக்க வந்தேன். அ.சா.1 எனது சொந்தக்காரர் என்றால் ஒரு ஜாதியின் அடிப்படையில் உறவினர் தான். வழக்கு சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அந்த விஷயத்தை பொறுத்து அ.சா.1-ன் அப்பா என்னிடம் கூறி நான் நாட்டாமை என்பதால் பலமுறை பஞ்சாயத்து செய்துள்ளோம். அ.சா.1 என் உறவினர் என்பதாலும் அசா.1-ன் அப்பா கேட்டுக்கொண்டதாலும் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் பலமுறை பஞ்சாயத்து பேசியதன் அடிப்படையிலும் 1-வது எதிரி என் தோப்பிற்கு வந்து கடைசியாக பஞ்சாயத்து வைத்ததன் அடிப்படையிலும் எனக்கு தெரியும்.